ஸ்ரீ ஹரி:

# மதுரமுரளி

ஜனவரி 2017

வேணு 22; கானம் 6



தனி பிரதி *Rs 15/-*

ஆண்டு சந்தா *Rs 180/-*

Delivered by India Post www.indiapost.gov.in

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிகை

விட்டலாபுரம் ஸ்ரீ ப்ரேமிக விட்டலன் சந்நிதியில்



மதுரமுரளி

வேணு 22; கானம் 6

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

# பொருளடக்கம்


5 மதுரமான மஹனீயர்-250

10 பக்தர்களின் கேள்விகளுக்கு ஶ்ரீஸ்வாமிஜியின் பதில்கள்

11 இரட்டைகளை கடந்த நிலை!

12 கங்கா பாட்டி

13 ப்ரேமிக பவனம் உதயம் - 2

16 கச்சியில் ஆனி கருட சேவை

18 ஏமாற்றும் மனது

20 பாலகர்களுக்கு ஒரு கதை


30 மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

32 உணர்வுபூர்வமாக ஸ்திரமாக இருக்க சில ரகசியங்கள்

35 பாரம்பர்ய பொக்கிஷங்கள்

36 சைதன்ய மஹாப்ரபு

40 படித்ததில் பிடித்தது



# மதுரகீதம்

## அழைத்தழைத்து என்னை

**ராகம்:ஹுஸேனி**

**தாளம்: ஆதி**

### பல்லவி

அழைத்தழைத்து என்னை க்ருபை செய்திடுவாரே – தன்
குழந்தையைபோல் - என் குருநாதர்

### அனுபல்லவி

பண்டிதன் முதல் பாமரன் வரை அவரை
அண்டியவர்களிடம் எல்லாம் அருள் சக்தி விளையாடிடுமே (அ)

### சரணம்

அருமையான கீர்த்தனங்கள் உண்டு பாவுக பக்தியும் உண்டு
அருமறை பொருளான பாகவத ப்ரவசனமுண்டு
வைஷ்ணவ ஸம்ஹிதை உண்டு தேவதா ஸ்துதிகள் உண்டு
திவ்ய தேச வைபவம் வ்யாஸ விஜயமும் உண்டு தானே (அ)
ப்ரேமிக பாகவதம் பாகவத தர்ம சாஸ்திரம்
ஆசார்ய ஹ்ருதயம் என அனேகமுண்டு தானே
ஆடிடுவார் இவர் பாடிடுவாரே – தன்
நிஜ ஆனந்த அனுபவத்தில் என்றும் திளைத்திடுவார் (அ)


---

<u>முன் அட்டை:</u>

ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபந்யாசம், மதுரை

<u>பின் அட்டை:</u>

ஸ்ரீ ஸ்ரீநிவாச பெருமாள் சந்நிதி, சேங்கனூர்



# மதுரமான மஹிமீயர்

**Dr ஆ பாக்யநாதன்**

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும், அதிலும் குறிப்பாக, சத்சங்கத்திற்கு வந்து, குருநாதரை அண்டி வாழக்கூடிய அடியார்களின் வாழ்க்கையில் மிகவும் மறக்கமுடியாத விஷயம் எது என்றால், முதன்முதலாக எப்படி ஸத்ஸங்கத்திற்கோ குருவிடமோ ஈர்க்கப்பட்டார்கள் என்பதுதான். அது, அவரவர்களுக்கு ஒரு சுவையான நினைவாக இருக்கும்.

சிங்கப்பூர் நாமத்வாரைச் சேர்ந்த ஜகன்னாதன் - வித்யா தம்பதியினரின் முதல் அனுபவமும் அதுபோல் சற்றே வித்யாசமானது. அவர்கள், அதுவரையில், சத்சங்கம், குருநாதரை அடையவேண்டும் என்றெல்லாம் நினைத்ததில்லை. ஜகனிற்கு தீராத கால்வலி. அதற்காக, அவர் எல்லாவிதமான மருத்துவமும் பார்த்திருந்தார். அவர், சிங்கப்பூரில் ஒரு வங்கியில் நல்ல வேலையில் இருந்தார். அவருக்கு ஒரு அழகான குடும்பம். இரண்டு குழந்தைகள். பையன் - துஷார், பெண் - கிருத்திகா. சிங்கப்பூரில் செரங்கூன் ரோடு, ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள் கோயில் அருகே கால்வலி சிகிச்சைக்காக வந்திருந்தார். அங்கு அருகில் ஒரு இளைஞர் நெற்றியில் கோபீசந்தனத்தோடு நின்றுகொண்டிருந்தார். அவர் வாய் ஏதோ முணு முணுத்துக்கொண்டிருந்தது. அருகே சென்றால் அவர் நாமா சொல்லிக்கொண்டிருந்தது தெரிந்தது. அவரிடம் பேச்சு கொடுத்தபோது அவர் பெயர் ரகு என்றும், அவர் நாமத்வார் அமைப்பை சேர்ந்தவர் என்றும் தெரியவந்தது. ரகு, தன் கையில் சில துண்டு பிரசுரங்களையும் வைத்திருந்தார். அதைப் பார்த்து ஜகன் விசாரித்தபோது, 'இங்கு மாடியில்தான் நாமத்வார் இருக்கிறது, அங்கு நாமஜபம் நடைபெற்று வருகிறது, ஆர்வம் இருந்தால் கலந்துகொள்ளலாம்' என்றார் ரகு.

அதை கேட்டு ஜகனும் வித்யாவும் மாடிக்குச் சென்று நாமத்வாரைப் பார்த்ததும் அவர்களுக்கு ஒரே ஆச்சரியம்.

நமது குருநாதர் திருவுருவப்படம் அங்கு இருந்தது. அங்கு எழுந்தருளியுள்ள மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் கொள்ளை அழகு அவர்கள் மனதை கொள்ளை கொண்டது. அவர்கள் ஏற்கனவே ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளை தொலைக்காட்சியில் கேட்டிருக்கிறார்கள். Internetல் பார்த்திருக்கிறார்கள். அவர்பால் எற்கனவே ஒரு ஈர்ப்பும் இருந்துள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜியைப் பார்க்க வேண்டும் என்று நினைத்திருக்கின்றனர். அப்பொழுதுதான் அவர்களுக்கு தெரிய வந்தது, அந்த நாமத்வார், குருநாதரின் அன்பர்களால் எற்படுத்தப்பட்ட இடம் என்று. அங்கு மஹாமந்திரகீர்த்தனம் தொடர்ந்து நடந்துவருகின்றது என்பதை தெரிந்துகொண்டார்கள் ஜகன்-வித்யா தம்பதியினர். குருவின்பால் முதற் அடி அப்படிதான் அவர்களுக்கு ஏற்பட்டது.

ஆரம்பத்தில், ஜகனிற்கு இருந்த ஒரே பிரச்சனை கால்வலிதான். அப்போதைக்கு ஜகனிற்கு உடல் நலம் நன்றாக வேண்டும் என்ற பிரார்த்தனை. எத்தனையோ வைத்தியம் பார்த்தாகிவிட்டது. நாமா சொல்லி வேண்டிக்கொண்டால் அந்த பிரார்த்தனைகள் மிக சுலபமாக நிறைவேறும் என்று நாமத்வார் அன்பர்கள் சொல்கின்றார்களே. நாமும் நாமம் சொல்லித்தான் பார்ப்போமே என்று நாமத்வாருக்கு வந்து நாமம் சொல்ல ஆரம்பித்தார். ஆச்சரியத்திலும் ஆச்சரியம். சில வாரங்களிலேயே அவருடைய வலி, இருக்கும் இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. இது கேட்பதற்கு ஒரு சாதாரணமான விஷயம் என்று தோன்றினாலும், அன்றய சூழலில், ஜகன்னாதனுக்கு நாமத்வார்மேல் ஈடுபாடு அதிகரிக்க அதுவே முதல் படியாக விளங்கியது. மஹாமந்திரத்தை சொல்லிக்கொடுத்த ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களை நேரில் சென்று தரிசனம் செய்யவேண்டும் என்ற அடுத்த அடிக்கு வழி வகுத்தது.

ஒவ்வொருவர் வாழ்க்கையில் நிகழக்கூடிய மிகச்சிறிய விஷயம்கூட ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது என்பதுதான் நமது சாஸ்திரங்களும் மஹான்களும் சொல்லும் விஷயமாகும். அப்படி இருக்க, ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மிக மிக முக்கியமான நிகழ்வு என்பது, அவரவர்கள் தங்கள் குருநாதரை அடைவதுதான். சென்றடையும் நமக்கு தெரியவில்லையே ஒழிய குருநாதருக்கு, நாம் யார், எதற்காக வந்துள்ளோம்? என்று நம்மைப் பற்றி அனைத்து விஷயங்களுமே தெரியும் என்பதுதான் உண்மை. இது எண்ணற்ற மஹாத்மாக்களின் சரித்திரத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ளலாம்.

குருநாதரை தரிசிக்கும் நாளை எதிர்பார்த்திருந்த ஜகன்னாதன்-வித்யா தம்பதியினருக்கு மறக்கமுடியாத சில அனுபவங்கள் ஏற்பட்டன. ஒரு முறை வித்யாவிற்கு ஒரு அருமையான கனவு. வித்யாவின் கனவில் குருநாதரை தரிசனம் செய்வதுபோலவும், குருநாதர் புன்முறுவலுடன் அவர்களிடம் சில விஷயங்கள் பேசிவிட்டு அவர்களுக்கு 'ஹரே ராம...' மஹாமந்திரத்தை உபதேசம் செய்வது போலவும் கனவுகண்டார். கனவில் பார்த்ததை வித்யா, சந்தோஷமாக ஜகனிடம் பகிர்ந்துகொண்டார்.

அதுபோல், ஜகனிற்கு ஒரு கனவு. அதிகாலை நேரம். குருநாதரை தரிசனம் செய்வதற்காக ஆஸ்ரமத்திற்கு வருகின்றார் ஜகன். அவருக்கு ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து 'காத்யாயனீ மஹாமாயே மஹாயோகின்யதீஸ்வரி...' என்ற வரிகள் யாரோ சொல்ல, அவர் காதில் விழுகின்றது. குருநாதரை தரிசனம் செய்கின்றார். இப்படி கனவில் குருநாதரைப் பார்த்த பிறகு, எப்பொழுது நேரில் தரிசனம் செய்வோம் என்ற உத்ஸாஹம் பல மடங்காக அதிகரிக்கத் தொடங்கியது.

தனுர் மாதத்தில், ஸ்வாதி அன்றுதான் முதன்முதலில் குருநாதரை தரிசிக்க மதுரபுரி ஆஸ்ரமம் வந்திருந்தார்கள் ஜகனும் வித்யாவும். ஸ்வாதி - குருநாதரின் திருநக்ஷத்திரம். தனுர் மாத பூஜை நடந்துகொண்டிருந்தது. 'காத்யாயனீ மஹாமாயே..' என்ற ஸ்ரீமத் பாகவத ஸ்லோகத்தை ஒருவர் பாராயணம் செய்துகொண்டிருந்தார். ஸன்னதி அருகே காத்யாயனி திருவுருவபடம் இருப்பதை ஜகன் பார்க்கின்றார். கனவில் கண்டதுபோலவே ஏற்பட்டது. குருநாதர், அவர்களை அருகே அழைத்துவிட்டு, அவர்களிடம் சில விஷயங்கள் பேசிவிட்டு, மஹாமந்திர உபதேசமும் செய்தார்கள். ஜகனும் வித்யாவும் தங்கள் கனவு பலித்துவிட்டதை அறிந்தனர், நம்மிடமும் பகிர்ந்துகொண்டனர். குருநாதரின தரிசனம், அவர்களுடைய முயற்சியினால் நடக்கவில்லை என்று நன்கு புரிந்தது.

ஒரு முறை தரிசனத்திற்கு வந்துவிட்டு கிளம்பும்போது, எங்கு என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கேட்டார்கள். வித்யாவிற்கு ortho problem, bones are weak. நாங்கள் ஜோதிடரைப் பார்த்தோம், சில பேரிடம் விசாரித்தோம். சில க்ஷேத்திரங்களுக்குச் சென்று பரிகாரம் செய்யவேண்டுமாம் என்று ஜகன் பதில் கூறினார். ஸ்ரீ ஸ்வாமிஜியும் சிரித்துக்கொண்டே, 'வயதானால் bones weakஆக தான் ஆகும்' என்று சொல்லிக்கொண்டே, ஜகன் - வித்யாவை ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸபெருமாள்

திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார்கள். பெருமாளைக் காண்பித்து, ‘நமக்கு பெருமாள் இருக்கிறார், நாமா இருக்கின்றது, இதுவே, ஸர்வ பரிகாரம்’ என்றார்கள். மேலும், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ‘கவலைபட வேண்டாம், நாமாவைப் பிடித்துக்கொள், நமக்கு எவையெல்லாம் தேவையோ அவற்றையெல்லாம் அது ஒன்று ஒன்றாக, பார்த்து பார்த்துப் பண்ணும்’ என்றார்கள். இது ஜகன்-வித்யாவிற்கு பெரிய உபதேசமாக அமைந்தது.

எப்பொழுதெல்லாம் வாய்ப்பு கிடைக்குமோ, அப்பொழுதெல்லாம் குருநாதர் தரிசனத்திற்காக சிங்கப்பூரிலிருந்து கிளம்பி வந்துவிடுவார்கள். அவர்கள் எண்ணற்ற விஷயங்களை பகிர்ந்துகொண்டார்கள். அதில் சுவாரசியமான ஒரு விஷயம் என்னவென்றால், ஒவ்வொரு முறை அவர்கள் சென்னைக்கு பயணம் வரும்பொழுதும் ஒரு அனுபவம் அவர்களுக்கு இருக்கும்.

ஒரு முறை சிங்கப்பூர் விமானநிலையம் செல்வதற்காக காத்துக்கொண்டிருந்தார் ஜகன். டாக்ஸி எதுவும் கிடைக்கவில்லை. நேரம் ஆகிக்கொண்டிருந்தது. விமானம் கிளம்பிவிட்டால் குருநாதரை தரிசிக்க முடியாதே என்று தாபப்பட்டு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களை மனதால் பிரார்த்தித்தார், ‘எப்படியாவது உங்கள் தரிசனம் கிடைக்கவேண்டும்’ என்று. எங்கேயோ சென்றுகொண்டிருந்த வேன் ஒன்று, திடீரென்று இவர் இருக்கும் இடம் வந்து நிறுத்தி, எங்கு செல்லவேண்டும் என்று கேட்டு, விமானநிலையம் வந்து இறக்கிவிட்டு, பணம் தரும்போது, அதைப் பெற்றுக் கொள்ளாமல், ‘God is Great, Give this money to someone who deserves it’. இந்தப் பணம் யாருக்கு தேவையோ அவர்களுக்கு தாருங்கள் என்று சொல்லிச் சென்றாராம். ஜகனிற்கு அங்கு குருநாதர்தான் தெரிந்தாராம்.

மற்றொரு முறை, விமானத்தில் பயணிக்கும்பொழுது, ஒரு சிறுவன் திடீரென்று மயங்கி விழுந்துவிட்டான். அங்குள்ளவர்களுக்கு முதலுதவி கொடுக்கத் தெரியும். ஆனால், மருத்துவம் செய்ய வேண்டுமானால், திரும்பி சிங்கப்பூருக்கே விமானத்தை கொண்டு சென்றுவிடுவார்கள். எல்லோருக்கும் ஒரு பதட்ட நிலை இருந்தது. ஆனால், ஜகனோ பையன் குணமாகவேண்டும் என்று நாமா சொல்ல ஆரம்பித்துவிட்டார். சிறிது நேரத்திலேயே மூர்ச்சையாக இருந்த அந்த சிறுவன், எழுந்துவிட்டான். எல்லோருக்கும் சந்தோஷம். அப்பொழுது, ஜகன் நினைத்துக்கொண்டார், ‘நாம் நாமா சொன்னதால் இந்த பையன் பிழைத்துக்கொண்டானா, இல்லை முதலுதவியினாலா என்று தெரியவில்லை.

ஆனால் ஒன்றை மறுக்கவே முடியாது, குருநாதரை அடைந்துவிட்டதால் இந்த சூழ்நிலையில் நமது வாக்கில் நாமாதான் வருகின்றது. இதைக்காட்டிலும், என்ன ஆத்மலாபம் இருக்கமுடியும்'. ஜகனிற்கு வேலையில் ஒரு பிரச்சனை. அவர் வேலைப்பார்த்து வந்த வங்கி, உலக பொருளாதாரம் பாதிக்கப்பட்டதால், அந்த பாதிப்பு இவர் வங்கிக்கும் ஏற்பட்டது. ஒரு சமயம், ஜகன், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களிடம் அந்த வங்கியை விலைக்கு யாரோ வாங்கபோகின்றார்கள் என்று சொன்னதும், ஸ்ரீ ஸ்வாமிஜியும் சிரித்துக்கொண்டே, நீ வேண்டுமானால் வாங்கிக்கொள்ளேன் என்றார்.

சிங்கப்பூரில் வங்கி வேலை போனபிறகு, சென்னைக்கு வந்தால் வேலை நிச்சயம் கிடைக்கும் என்று ஜகன் நினைத்தார். அதற்கான முயற்சிகளை எடுத்து வந்தார். ஆனால், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களோ, உனக்கு சிங்கப்பூரில் வேலை காத்துக்கொண்டிருக்கின்றது என்றார்கள். வாஸ்தவத்தில் சிங்கப்பூரில் வேலை கிடைக்க வாய்ப்பே இல்லை. ஆனால், குருநாதரோ சிங்கப்பூரில் வேலை இருக்கிறது என்கின்றார்கள்.

ஒரு நாள் கனவில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஒரு வங்கியின் பெயரைச் சொல்லி அந்த வங்கியில் வேலைக்கு முயற்சி செய் என்றார்கள். அதன்படியே அந்த வங்கியைத் தொடர்புகொண்டபோது, அதில் தமது நெடுநாளைய நண்பர் ஒருவர், இவரது விண்ணப்பத்தை எடுத்துக்கொள்ள, அந்த வேலையும் சிங்கப்பூரிலேயே அமைந்தது.

குருநாதர் க்ருபையினால், ஜகனும், வித்யாவும், குழந்தைகளும், நாமத்வாரில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன் ஸன்னதியில் கைங்கர்யம் செய்துகொண்டு நாமம் சொல்லிக்கொண்டு, தங்கள் வாழ்க்கை, ஒரு பூக்கள் நிறைந்த பாதையாக உள்ளது என்கிறார்கள்.

ஒவ்வொருவருக்கும் கண்ணாடி முன்பாக நிற்கும் பொழுது தான் தான் மிகவும் அழகு என்ற ஒரு எண்ணம் மனதில் வரும். ஸ்ரீ ஸ்வாமிஜி சொன்னார்கள், அது போலவே எல்லோருக்கும் எப்பொழுதும் மனதளவில் தன்னை போல் நல்லவர் யாரும் இல்லை என்ற எண்ணமும் உண்டு.

- ஜனனி வாசுதேவன்

# பக்தர்களின் கேள்விகளுக்கு
# ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

**அன்பர்: நான் முக்தியடைய தகுதியில்லாதவன் என்று நினைக்கின்றேன். ஏனென்றால், என்னுடைய புத்தி தூய்மையானதாக இல்லை.**
**ஸ்ரீ ஸ்வாமிஜி: இருந்தால் இருந்து விட்டுப் போகிறது.**

**அன்பர்: எனக்கு இறைவனிடம் பக்தியும் இல்லை; ஜீவன் முக்தர் ஆவதற்கு சாத்தியமும் இல்லை.**
**ஸ்ரீ ஸ்வாமிஜி: இருந்தால் இருந்து விட்டுப் போகிறது.**

**அன்பர்: நீங்கள் சொல்லும் மஹாமந்திரத்தைக் கூட என்னால் பக்தியுடன் சொல்ல முடியாது.**
**ஸ்ரீ ஸ்வாமிஜி: இருந்தால் இருந்து விட்டுப் போகிறது.**

**அன்பர்: நீங்கள் சொல்லும் மஹாமந்திரத்தை அடிக்கடியெல்லாம் என்னால் சொல்ல முடியாது.**
**ஸ்ரீ ஸ்வாமிஜி: இருந்தால் இருந்து விட்டுப் போகிறது.**

**அன்பர்: இப்படியே சொன்னால் எனக்கு என்னத்தான் வழி?**
**ஸ்ரீ ஸ்வாமிஜி: மஹாமந்திரத்தை முடிந்தபொழுது எப்படி முடியுமோ அப்படி சொல்லிவா, போதும்!**

# இரட்டைகளை கடந்த நிலை!

ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி

ஒருவர் தன் உடலை நன்கு அலங்கரித்துக் கொண்டும், வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொண்டும், உயர்ந்த ஆடை அணிகலன்களை அணிந்து கொண்டும், உடலுக்கு இதமான வகையில் சுகமான வாழ்க்கையை வாழ இயலும். அதே சமயம், சில சமயங்களில், அவரே ஏதோ ஒரு காரணத்தால் வலியினால் துடிப்பதையும், கூர்மையான ஆயுதங்களால் பிறரால் தாக்கப்பட்டுத் துன்பப்படுவதையும் காண முடிகிறது அல்லவா? மேலும், சிலரால் மற்றவருக்கு மிகுந்த நன்மைகள் ஏற்படுவதையும், நன்மை செய்தவரே அவர்களது துன்பங்களுக்குக் காரணமாகிவிடுவதையும் பார்க்க முடிகின்றது. மேலும், புகழ்ச்சியான வார்த்தைகளையும், இதமான பேச்சுகளையும் கேட்டு இன்புறும் மனமானது, சில நேரங்களில் தகாத வார்த்தைகளால் இகழப்படும்போது நிம்மதியை இழந்து துன்புறுகிறது. நம்மை ஆக்கப் பூர்வமான விஷயங்களில் தூண்டிவிட்டு, நல்வழியில் செலுத்தும் நமது புத்தியானது, சில சமயங்களில் நம்மைத் தீய நடவடிக்கைகளில் ஈடுபடும்படித் தூண்டிவிட்டு துன்பத்திற்கும் காரணமாகிறது.

ஆனால், உண்மையில் நமது உள்ளே உறைந்து வியாபித்திருக்கும் மெய்ப்பொருளான ஆன்மாவானது இந்த இன்ப துன்ப இரட்டைகளால் பாதிக்கப்படாமல் இவை அனைத்திற்கும் மேல் நின்று சாட்சியாக விளங்குகிறது. ஆன்மாவிற்கு யாரும் இன்பமோ துன்பமோ விளைவித்துவிட முடியாது.

# கங்கா பாட்டி

**Dr ஆ பாக்யநாதன்**



கங்கா பாட்டி என்றால் காஞ்சி பெரியவாளின் பக்தர்களுக்கு தெரியாமல் இருக்க முடியாது. பல வருடங்களாக தனது குடும்பத்துடன் ஸ்ரீ மஹா பெரியவாளின் பக்தியில் ஈடுபட்டவர். ஏறத்தாழ முப்பது வருடங்களுக்கு முன் நம் ஸ்வாமிஜி அவர்கள் காஞ்சிபுரம் சென்று வந்த சமயங்களில் கங்கா பாட்டி, தான் தங்கியிருக்கும் இடத்திற்கு ஸ்வாமிஜியை அழைத்துச் சென்று உணவு கொடுத்து, அன்புடன் ஒரு தாயாரைப் போல் பார்த்து கொள்வார். கங்கா பாட்டியின் மூத்த புதல்வன் தம்பு என்று அழைக்கப்பட்ட க்ருஷ்ணஸ்வாமி சென்ற வருடம் பகவான் திருவடியை அடைந்தார். ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி ஜீவித்திருக்கும் பொழுதே பம்மலில் அவர் வசித்து வந்த வீட்டை ஸ்வாமிஜிக்கு தர ஆசைப்பட்டார். கங்கா பாட்டிக்கு ஒரே வியப்பு. தான் நினைத்ததையே தம்பு கூறியது அதற்கு காரணம். க்ருஷ்ணஸ்வாமி காலமான பிறகு, அத்தகைய புத்திரசோகத்திலும், தனது மனதை விவேகத்தாலும், வேதாந்த தத்துவங்களாலும் சமாதானபடுத்திக்கொண்டார். அந்த ஒரு நிலையிலும் க்ருஷ்ணஸ்வாமியின் விருப்பப்படி, பம்மல் சங்கர் நகரில் பங்களா போல் உள்ள வீட்டை ஸ்வாமிஜியின் கைங்கர்யத்திற்கு சமர்ப்பித்து, தன்னுடைய மனோரதத்தையும் பூர்த்தி செய்துகொண்டார்.

# ப்ரேமிக பவனம் உதயம்

“சரி” என்று உடனே ஆவலுடன் சென்று பார்த்ததுமே ஜெயந்திக்கு ஒரே ஆச்சர்யம்! சுவாமிஜி என்றதுமே மனதில், தாடியுடனும் காஷாயத்துடனும் ஒரு உருவத்தை கற்பனை செய்து கொண்டு போன ஜெயந்திக்கு, தேஜஸ்வியான ஒரு சிறிய பிரம்மச்சாரி வெள்ளை வேஷ்டி கட்டிக்கொண்டு, எளிமையாக புன்சிரிப்புடன் உட்கார்ந்திருப்பதை பார்த்து, வியப்பு! அருகில் சென்று நமஸ்காரம் செய்ததுமே, முதன் முறையாக பார்ப்பது போல் இல்லாமல், மிகவும் பழகிய ஒருவரைப் போல் ‘உன் பெயர் என்ன? கணவன் பெயர் என்ன? எவ்வளவு குழந்தைகள்? என்ன படிக்கிறார்கள்? நீ வேலை பார்க்கிறாயா?’ என்றெல்லாம் உரிமையுடன் அன்பாக விசாரித்தார்.

இதை பார்த்து, ஜெயந்தி வியப்படைந்தார். முதல் சந்திப்பிலேயே, ஜெயந்தியின் மனம், குருநாதரின் பால், ஆகர்ஷிக்கப்பட்டது. இனம் புரியாத நிம்மதியும் ஆனந்தமும் அடைந்தார். அவரை பார்த்தாலே, மிகவும் இளைஞராக இருந்தாலும், எல்லாம் அறிந்த ஞானி என்று தோன்றிற்று. நம் பிரார்த்தனைக்கு கிடைத்த, குருநாதர் இவரே என உணர்ந்தார்.

வீடு திரும்பியதுமே, மீண்டும் 'குருஜி'யை தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. தனது பையன் பிரதீப் அப்போது I.I.T entrance exam எழுதி விட்டு, நல்ல resultஇற்காக காத்திருந்த சமயம். "நான் இப்போது ஒருவரை பார்த்து விட்டு வருகிறேன். தேஜஸ்வியான பிரம்மச்சாரியாக உள்ளார். குருஜி என்று அழைக்கிறார்கள். அவரை சென்று பார்க்கலாம் வா. அவரிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொள்!" என்று அவனையும் அழைத்து கொண்டு, மறுபடியும் குருநாதரை பார்க்க சென்றார். பிரதீப் ஸ்வாமிஜியை நமஸ்கரித்து, IIT entrance விஷயத்தை சொன்னதுமே, ஸ்ரீஸ்வாமிஜி 'நீ BITS Pilaniயில் apply செய்திருக்கிறாயா?' என்று கேட்டார். IITயை பற்றி பேசவே இல்லை. "நீ BITS Pilaniயில் apply பண்ணு' என்றார். (அவர் வார்த்தைக்கு ஏற்றார் போல் பிரதீப் BITS Pilaniயில் தான் engineering படித்தார்.) உடனே ஜெயந்தி அவர்கள், தனக்கு நாம உபதேசம் செய்யும்படி பிரார்த்திக்க, குருஜியும், 'நாளை காலை வா, உபதேசிக்கின்றேன்' என்று கூறி அனுப்பினார். அடுத்த நாள், காலையில் ஆவலுடன் சென்ற ஜெயந்தி, தனக்காக துளசி செடி அருகில் காத்திருந்த குருநாதரை பார்த்து, மனம் நெகிழ்ந்து, நாமோபதேசமும் பெற்றார். 'உனது பெண் எங்கே?' என்று கேட்க, வெளியூர் சென்றிருக்கிறாள் என்று கூறினார் ஜெயந்தி. தினமும் ஓடி ஓடி வந்து ஆனந்த தர்சனமும், குருநாதரின் அருள் அமுதமும் பெற்றார்.

சில நாட்களிலேயே, ஸ்ரீ ஜானகிராமன் அவர்களும், ஸ்ரீஸ்வாமிஜியின் பக்தரானார். ஊர் திரும்பியதும் சங்கீதா என்ற தனது

பெண்ணையும் அழைத்து வந்தார் ஜெயந்தி. “அவளுக்கும் நமோபதேசம் பெற வேண்டுமாம்” என்று கூறியதும் உடனே குருநாதர், அவளுக்கும் நாம உபதேசம் செய்தார். சங்கீதாவும் குருநாதரிடம், அதிக அன்பும் பக்தியும் கொண்டாள். இந்த குடும்பமே தன்னிடம் வரப்போவதை, தான் முன்பே அறிந்திருந்ததை பல முறை தெரிவித்துள்ளார் ஸ்ரீஸ்வாமிஜி. இவ்வாறு ஜெயந்தியும், அவரது குடும்பமும், ஸ்ரீஸ்வாமிஜியிடம் பக்தி பூண்டு, தினமும் அவரை தரிசித்து, சத்சங்கங்களை அனுபவித்துக்கொண்டு ஆனந்தமாக நாட்களை கழித்தனர்.

அப்போது, குருஜி, பாரதிதாசன் காலனியில், 51K என்ற ஒரு flatஇல் வசித்து வந்தார். ஒரு சமயம் அந்த flatஐ காலி செய்யும்படியான ஒரு நிர்பந்தம் ஏற்பட்டது. உடனே ஜெயந்தி, “எனது கணவருக்கு பாண்டிச்சேரிக்கு transfer ஆகி உள்ளது. அதனால் நாங்கள் அங்கு செல்வதாக உள்ளோம். அதனால் தாங்கள் எங்கள் க்ருஹத்தில் வந்து தங்கி கொள்ளுங்கள். அது எங்கள் பாக்கியம் என்றே எண்ணுகிறோம்” என்று அன்புடன் அழைத்தார். ஆனால், குருநாதர் உடனே ஒப்புக்கொள்ளவில்லை. க்ருஹஸ்தர்களுக்கு பாரமாக, தான் இருக்ககூடாது என்று எண்ணி தயங்கினார். ஆனால், மிகுந்த அன்புடன், ஜெயந்தி வற்புறுத்தி அழைக்கவே, கடைசியில் சம்மதித்தார். ஆச்சர்யமாக, குருநாதர் வருவதாக நிச்சயம் ஆனதுமே, Pondichery போக வேண்டிய நிலை மாறியது. ஆகையால் குருஜிக்காக, முதல் மாடியில், தங்குவதற்கு ரூம் கட்டி சத்சங்கம் நடப்பதற்கு, கூரையும் போட்டு கொடுப்பதாக ஏற்பாடாகியது. அது தயார் ஆகும் வரையில் கோமளா (retired officer from I.O.B) என்ற வயதான பக்தையின் வீட்டில், குருஜி 3 மாதங்கள் வசித்தார். அச்சமயம், மகாபலிபுரத்திலிருந்து ஒரு ஸ்ரீனிவாச பெருமாளை (கருங்கல்லால் ஆன அர்ச்சை) ஆசையுடன் வாங்கி வந்தார்.

ப்ரேமை தொடரும்...



# கச்சியில் ஆனி கருட சேவை -6

**- ஸ்ரீ ராமானுஜம்**

ஒருமுறை தாயார் சன்னதியில் திருட்டு நடந்தது... எல்லா ஆபரணங்களும் திருட்டு போயிற்று, தாயாரின் திருமாங்கல்யம் மட்டுமே மிஞ்சி இருந்தது. இந்த விஷயம் ஸ்ரீ காஞ்சி பெரியவரின் காதுகளுக்கு எட்டியபோது, அவர், 'திருடனாக இருந்தாலும், ஒரு நல்ல குணம் அவனுக்கு இருக்கு பார்! திருமாங்கல்யத்தையும் சேர்த்து எடுத்து செல்லாமல், அதை மட்டும் விட்டு மற்றவற்றை மட்டுமே எடுத்துச் சென்று இருக்கிறான்!!' என்று சொன்னாராம்! மஹான்கள் ஒரு விஷயத்தை பார்ப்பதே தனி கோணமாகத்தான் இருக்கிறது அல்லவா!

ஸ்ரீஸ்வாமிஜி, 'ஒரு அம்மா இருந்தாலே ஒரு குழந்தை கவலையற்று இருக்கும், நம் பாக்கியத்தைப் பார்த்தாயா! நமக்கோ இங்கு மகாலக்ஷ்மி தாயார், ஸ்ரீரங்கத்தில் பெரிய பிராட்டி, திருப்பதியில் அலர்மேல் மங்கை தாயார்.. இப்படி 108 தாயார்கள் அல்லவோ நம்மை பார்த்துப்பார்த்து லாலனை செய்கின்றார்கள்!!' என்று மனம் நெகிழ்ந்து சொன்னார்!!!

திரை விலகியது!!!

ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் நாங்களும் சென்றோம். ஸ்ரீ ஸ்வாமிஜியை பார்த்ததும், தாயார் சந்நிதியில் இருந்த ஸ்ரீ வைஷ்ணவ பெரியவர், ஸ்ரீஸ்வாமிஜியை, தடுப்பு விலக்கி, சந்நிதிபடி அருகே நிறுத்தி, அழகான ராகத்துடன் கூடிய குரலில், அஷ்டோத்தர அர்ச்சனை செய்தார், செய்வதற்கு முன்பாக, ஸ்ரீஸ்வாமிஜியின் திருக்கரங்களில் ஆலவட்டம் (விசிறி) கொடுத்து தாயாருக்கு வீச சொன்னார். நமது சத்குருநாதரின் இதயத்தில் என்ன ஆனந்தம் ஏற்பட்டதோ!! அவர் மனம் எப்படி உருகியதோ!!! அவருக்குத் தான் அது தெரியும்...நமது ஸ்ரீஸ்வாமிஜியும், வைத்த கண் வாங்காமல் தாயாரை தரிசித்த வண்ணம், ஆலவட்டம் வீச, மற்றொரு வைஷ்ணவர் அருகில் இருந்த மின் விசிறியை on செய்துவிட்டார்.

எங்களுடைய சிறிய மூளைக்கு என்ன தோன்றியது என்றால், தாயாரிடம் மாத்ரு பக்தியுடன் நமது குருநாதர் ஆலவட்ட

கைங்கர்யம் செய்ய, கருணையே வடிவான தாயாரோ, தனது குழந்தைக்கு ‘ஜில்’ என்று காற்று வீசவைத்து, அதில் தானும் சந்தோஷப்பட்டாள் போலும்! ஸ்ரீஸ்வாமிஜிக்கு தாயார் தனது மாலையையும், குங்குமம், மஞ்சள் பிரசாதங்களை அர்ச்சகர் முகேன கொடுத்து அருளினார். ஸ்ரீஸ்வாமிஜி ஆனந்தமாக சந்நிதியை வலம் வரும் போது, அங்கு சுவரில் உள்ள சித்திரங்களை காட்டி, இந்தத் தாயாரின் கிருபையால்தான், ஸ்வாமி தேசிகன், ஸ்ரீ ஸ்துதி அருளிச்செய்து, ஒரு ஏழை அந்தணருக்கு ஸ்வர்ண காசு மழை பொழிய வைத்தார் என்று எங்களுக்கு கூறினார்.

25 ஸ்லோகங்களைக் கொண்ட ஸ்வாமி தேசிகரின் ஸ்ரீஸ்துதியைப் பற்றி சுவாரஸ்யமான ஒரு விஷயத்தை ஸ்ரீஸ்வாமிஜி பகிர்ந்து கொண்டார்கள். இதில், 25 ஸ்லோகங்களில், 24ல் மந்தாக்ராந்தா என்ற வ்ருத்தத்திலும் கடைசி ஸ்லோகத்தை மாலினி என்ற மீட்டரிலும் எழுதி உள்ளார் ஸ்வாமி தேசிகன்.

தூப்புலில், ஸ்வாமி தேசிகன் இருக்கையில், ஒரு ப்ரம்மச்சாரி வந்து “ஸ்வாமி! போதிய திரவியம் இல்லாததால், என்னால் கிரஹஸ்தாஸ்ரமத்தில் பிரவேசிக்க முடியவில்லை” என சொல்லி வருத்தப்படுகிறார். அவர், மனமுருகி பிரார்த்தனை செய்ததால், அவரை பெருந்தேவி தாயாரின் சன்னதிக்கு ஸ்வாமி தேசிகன் கூட்டி வந்தார். தாயார் சன்னதியில் ஸ்ரீஸ்துதியை செய்து போற்ற, மகிழ்ந்த மஹாலக்ஷ்மி தாயார், தங்க மழையை பொழிந்தாள். மஹா வைராக்யசாலியான ஸ்வாமி தேசிகன், அந்த தங்கத்தை ப்ரம்மச்சாரியிடம் காண்பித்துவிட்டு, அவர் திரும்பிவிட்டார்.

ஸ்வாமி தேசிகனுக்கும் தாயாருக்கும் தெண்டம் சமர்ப்பித்து, அந்த தங்கத்தை எடுத்து கொண்ட அந்த ப்ரம்மச்சாரியும் வாழ்க்கையில் பரம ஸ்ரேயஸை அடைந்தார் என்று இந்த விஷயத்தையும் எங்களிடம் ஸ்ரீஸ்வாமிஜி பகிர்ந்துகொண்டார்கள்.

இப்போது வரதராஜ பெருமாளை தரிசனம் செய்யப் புறப்பட்டோம்; கூட்டம் இருக்குமா கூட்டம் இருக்குமா என்று ஸ்ரீஸ்வாமிஜி கேட்ட வண்ணம், சந்நிதி நோக்கி நடந்தார். இன்று இருக்காது என்று சொல்லியவண்ணம் ஸ்ரீஅரவிந்தும் அவரோடு நடந்து வந்தார்...

- ஸ்ரீ வரதர் வருவார்....

# ஏமாற்றும் மனது

ஜனனி குமாரஸ்வாமி

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் நிகழ்த்திய சமீபத்திய உபன்யாசம் ஒன்றில் கூறிய ஒரு சுவாரசியமான விஷயத்தை இங்கே பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நாம் எப்பொழுதும் மற்றவர்களை நமது சாமர்த்தியமான யுக்திகளால் ஏமாற்ற முயற்சி செய்வோம். ஆனால், நம்மை எப்போதும் மிக மிக சாமர்த்தியமாக ஏமாற்றிக்கொண்டிருக்கும் மனதை அடையாளம் காணத் தவறி விடுகிறோம். உதாரணத்திற்கு, நாம் திருப்பதிக்குச் சென்று பெருமாளை தரிசனம் செய்வதாக வைத்துக் கொள்வோம். ஏதோ பாக்யவசத்தால் நம்மை அழைத்து குலசேகரப்படியின் அருகிலேயே எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் அமர்ந்து தரிசனம் செய்யுங்கள் என்று சொல்லி அமரவைத்துவிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இப்போது நாம் என்ன செய்வோம்? முதலில் இந்த ஒரு வாய்ப்பு கிடைத்ததற்காக மிகவும் மகிழ்வுற்று பெருமாளைப் பார்த்துக்கொண்டே இருப்போம். "எவ்வளவு பெரும் பேறு? இதை நழுவவிடக்கூடாது. யாராவது எழுப்பிவிடும்வரையில் இங்கிருந்து எழுந்துவிடக் கூடாது" என்றும் நினைப்போம்.

சிறிது நேரம் கழித்து நமது மனம் அங்கே வருபவர் போவோரிடமும், தரிசனத்திற்காக வரிசையில் நின்று கொண்டிருப்பவர்கள் மேலும் செல்லும். யாராவது நம்மை கவனிக்கிறார்களா? நாம் எவ்வளவு பெரும் பேறு பெற்றிருக்கிறோம். எத்தகைய பெருமை? மற்றவர்களின் கவனம் நம் மீது விழுகிறதா என்று, நமது எண்ணம் முழுதும் பெருமாளை விட்டு விட்டு

அவர்கள்மேல் திரும்பிவிடும். இன்னும் சிறிது நேரம் கழித்து, நமக்கு வெகு நேரம் ஒரே இடத்தில் உட்காரப் பொறுமை இருக்காது. இப்போது நமது மனம் நம்மிடம் என்ன சொல்லும் தெரியுமா? பாவம் இவர்கள் பெருமாளின் கணநேர தரிசனத்திற்காக எவ்வளவு நேரம் கால் கடுக்க வரிசையில் நின்று வந்திருக்கிறார்கள்? நாம் இப்படி சுகமாக அமர்ந்து வெகு நேரம் தரிசனம் செய்வது இவர்களின் உரிமையைப் பறிப்பதுபோலாகும். எனவே, நாம் வெகு நேரம் இங்கு அமரக்கூடாது என்று ஏதேதோ நியாயங்களைப் பேசி, நம்மை வென்று, அங்கிருந்து எழுப்பிவிட்டுவிடும். உண்மை என்னவெனில், வெகு நேரம் ஓரிடத்தில் அமரப் பொறுமை இல்லாமல் போனதோடு மட்டுமின்றி, நமது மனம் அதை மறைக்க ஒரு காரணத்தைக் கற்பித்து, நாம் ஏதோ பெரிய தியாகம் செய்துவிட்டதுபோல் நம்மை உணரச் செய்துவிடும்.

love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates

rajmani group of companies

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

# பாலகர்களுக்கு ஒரு கதை

## விஷமான கோபம்

**தச்சர் ஒருவர், தனது கடையில் வேலை செய்து கொண்டிருந்தார். அவர், ஒரு வாடிக்கையாளர்மேல் மிகுந்த கோபமாக இருந்தார். தான் செய்து தந்த பொருளுக்காக, தான் கேட்ட தொகையை வாடிக்கையாளர் தரவில்லை என்றதால், 'அவர் வரட்டும், பார்த்துக் கொள்கிறேன்' என்று கோபமாக இருந்தார். அந்த கோபத்துடனேயே வேலையில் ஈடுபட்டு இருந்தார். அப்பொழுது மதிய உணவிற்கான வேளை வரவே, தனது உபகரணங்களை எல்லாம் ஒருபுறமாக வைத்துவிட்டு, கடையைப் பூட்டிக்கொண்டு கிளம்பினார்.**

**அந்தக் கடைக்கு வெளியே, அப்பொழுது ஒரு விஷமுள்ள பாம்பு வந்தது. அது மிக்க பசியுடனும் தாகத்துடனும் இருந்தது. உணவிற்கு ஏதாவது கிடைக்குமா என அலைந்துகொண்டிருந்தது. வீதியில் மனிதர்கள் அலைந்து கொண்டிருந்ததால், அது வளைந்து நெளிந்து ஒளிந்து அந்த கடை வாசல் கதவின் இடுக்கின் வழியே வேகமாக உள்ளே சென்றது. கடை உள்ளே அது கண்முன் தெரியாமல் பசியில் சென்றதால், ஒரு நீண்ட ரம்பம் போன்ற வாளின்மேல் விழுந்தது. அது மிகவும் கூர்மையாக இருந்ததால், பாம்பிற்கு அடிபட்டு ரணமாயிற்று.**

**ஏற்கனவே பசி, தாகம். இருட்டு. இரை தேடி வந்த இடம், இப்படி அடிபட்டவுடன் அதற்கு மேலும் கோபம் அதிகமானது. சட்டென வந்த கோபத்தில், ஒன்றையும் யோசியாமல், தனக்கு ரணம் வர காரணமாகிய வாளையே தாக்கியது. வாளோ உலோகத்தால் ஆனது. பாம்பின் கடி, வாளை என்ன செய்யும்? வாள், பாம்பை மேலும் ரணமாக்கியது மட்டுமல்லாமல், இப்பொழுது பாம்பிற்கு வலி இன்னும் அதிகமாயிற்று. தன்னை இப்படி மேலும் காயப்படுத்தியதை, எப்படியேனும் தாக்கி காயப்படுத்த வேண்டும் எனும் கண் முன் தெரியாத கோபத்தால், அந்த வாளை மீண்டும் மீண்டும் பலமாக கொத்தியது. அது, மேலும் மேலும் காயப்பட்டது மட்டுமல்லாமல், தன் பலமும் இழந்து மயங்கியது. தச்சர் சாப்பிட்டுவிட்டு ஒரு மணி நேரம் கழித்து வந்து தன் கடை கதவை திறந்தார். அவர், தன் வாளின்மேல் ஒரு பாம்பு இறந்து கிடப்பதை பார்த்தார். அவர் எப்படி பாம்பு இறந்திருக்கும் என யோசித்தார். பசியால் கோபம் கொண்ட பாம்பு அறியாமையினால் வாளின்மேல் கோபம் கொண்டு அதைத் தாக்கி கொத்தி உயிரை விட்டிருக்கிறது என அவர் புரிந்துகொண்டார்.**

“அந்த பாம்பு அறிவில்லாமல் செயல்பட்டிருக்கிறது”. “அதன் கோபம் அதன் உள்ளே இருந்து அதற்கேதான் கெடுதலை தந்திருக்கிறது” என நினைத்தவாறு சுத்தம் செய்ய போனார்.

சட்டென அவருக்குள்ளேயே ஒரு அறிவு சுதாரித்தது. இப்படிப்பட்ட கோபம், அறிவை அழித்து, எது தேவையோ அதையே மறக்கடித்து விடுகிறதே? நாமும், ஒரு வாடிக்கையாளர் மேலல்லவா கோபப்பட இருந்தோம்? என நினைத்தார். அப்பொழுது சரியாக அந்த வாடிக்கையாளரும் வந்தார்.

உடனே தச்சர், தன் மனதிலிருந்த கோபத்தை ஒழித்து, தனக்கு என்ன தேவை என்பதை மனதில் வாங்கிக்கொண்டு, வாடிக்கையாளரிடம் நிதானமாக அழகாக எடுத்துப் பேசினார். நிதானமாக பேசியதால் சந்தோஷப்பட்ட அவரும், தச்சர் கேட்ட தொகையை கொடுத்து சந்தோஷப்படுத்திவிட்டுப் போனார். தச்சர், தொடர்ந்து சுத்தம் செய்யலானார்.

அப்பொழுது, அவர் மனதிலே, “பாம்பின் கோபம் பாம்புக்குத்தான் விஷமாய் முடிந்தது. அதுபோல், எனக்கும் என் கோபம் விஷமாய் முடிந்திருக்கும். இந்த பாம்பு மட்டும் சாகவில்லை. என் மனதில் இருந்த கோபம் எனும் பாம்பும் செத்துவிட்டது. நல்ல வேளை!” என எண்ணி தனக்கு தானே சபாஷ் போட்டுக்கொண்டார்! சுத்தம் செய்கையில், அவர் தன் மனதில் கோபம் என்னும் விஷமும் துடைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து சந்தோஷம் அடைந்தார்.




75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com



1 Dec 2016, பகவான் யோகிராம்சுரத்குமார் ஜெயந்தி மஹோத்சவம், ABHAYAM - The Divine Shelter, கூடுவாஞ்சேரி, சென்னை



14-15 Dec 2016, ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபந்யாசம்,
லக்ஷ்மி சுந்தரம் ஹால், மதுரை



மார்கழி மாத நகர கீர்த்தனம், பெரியகுளம், 16 Dec 2016





25 Dec 2016, ப்ரஹ்மஸ்ரீ V ராஜகோபால கனபாடிகளின் 'வைதிக ஸ்ரீ' பத்திரிக்கையின் ஆண்டு விழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அனுக்ரஹ பாஷணம் நடைபெற்றது. ஸ்ரீ உ வே மஹா மஹோபாத்யாய ஸ்ரீவத்ஸங்காசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உ வே VS கருணாகராச்சார்யார் ஸ்வாமி, Former Election Commissioner ஸ்ரீ TS கிருஷ்ணமூர்த்தி, Post Master General (Mails and BD) ஸ்ரீ JT வெங்கடேஸ்வரலு, கலந்துகொண்டனர்.

## ஸ்ரீ ராமானுஜம்ஜியின் சத்சங்கங்கள் (28 Nov - 22 Dec 2016)

Workshops: Inner Strength Youth Workshop - Dallas; Live Life Li'l Slower - Virginia; Leadership, Happiness Inner Transformation Workshops - HP, Intel, DELL, MD Anderson Cancer Center; Reality Retreat Meditation - Houston

உபந்யாசங்கள்: ஸ்ரீமத் பாகவதம் - Dallas, ருக்மிணி கல்யாணம் - Detroit, பக்தி யோகம் - Virginia, பாகவத தர்மம் - Maryland, கண்ணினும் சிறுதாம்பு - Houston

ஸ்ரீ ஸ்வாமிஜியின் சம்பூர்ண மதுரகீத மகாயக்ஞமும் நடைபெற்று வருகின்றது



Reality Retreat Meditation, Houston




பக்தி சுகந்தம் நாட்டிய நிகழ்ச்சி,
18 Dec 2016, Houston



Inner Strength Workshop for Teens, Boston




சத்சங்கத்தை சேர்ந்த குழந்தைகளின் மதுரகீதம்



செல்வி JB கீர்த்தனா



ஸ்ரீமதி காயத்ரி வேங்கடராகவன்



ஸ்ரீமதி வசுமதி தேசிகன்



ஸ்ரீமதி வரலக்ஷ்மி அனந்தகுமார்



நூரணி சகோதரர்கள்



ஸ்ரீமதி ராதா பார்த்தசாரதி




ஸ்ரீ சுனில் R.கார்க்யன்

## சென்னையில் 19-25 Dec
## தெய்வ தமிழ் இசை விழா




ஸ்ரீ ராமஸ்வாமி அவர்களின் ஸ்ரீமத் பாகவதம் உபந்யாசம், 1-7 Dec 2016 பாலக்காடு, 14-20 Dec 2016 திருவனந்தபுரம்




குமாரி காயத்ரியின் ஸ்ரீமத் ராமாயண உபந்யாசம், 1-9 Dec 2016, பெங்களூரு. குமாரி காயத்ரி, குமாரி பிரியங்கா ஸ்ரீமத் பாகவதம் உபந்யாசம், 14-21 Dec 2016, ஹைதராபாத்





குமாரி ஸ்ரீ கன்யா, குமாரி ஷிவ் கன்யா, ஸ்ரீமத் பாகவத உபந்யாசம், 1-9 Dec 2016 சிட்லபாக்கம், 21-27 Dec 2016 பெரியகுளம்




ஸ்ரீ முரளி அவர்களின் Student Mass Prayer சென்னை மற்றும் ராணிப்பேட்டையில், 3 பள்ளிகளில் நடைபெற்றது. சுமார் 3500 மாணவ மாணவியர்கள் கலந்துக்கொண்டனர்.



பம்மல் ஸ்ரீ பாலாஜி அவர்களின் சத்சங்கம், அனகாபுத்தூர், 14-21 Dec 2016




ஹனுமத் ஜெயந்தி, ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய ஸ்வாமி கோவில், பெங்களூரு, 12 Dec 2016

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

# மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

**ஸ்ரீ விஷ்ணுப்ரியா**

## அங்க

‘அங்கம்’ என்றால் உறுப்பு. நமது சரீரத்தை எடுத்து கொண்டால் கண், மூக்கு, கை, கால் இவை எல்லாம் அதன் அங்கங்கள் ஆகும். அதனால் உறுப்புக்கள் ஏதேனும் இல்லையெனில் அவர்களை ‘அங்கஹீனர்கள்’ என்கிறோம். ஹீனம் என்றால் குறைபாடு. எந்த விஷயத்திற்காவது பல பிரிவுகள் இருந்தால், அவைளை அதற்கு அங்கங்களாக சொல்வது வழக்கம். பதஞ்சலி எழுதிய யோக சாஸ்திரத்திற்கு "அஷ்டாங்க யோகம்" என்று பெயர். ஏனென்றால் அதற்கு எட்டு பிரிவுகள், அதாவது படிப்படியாக படிக்கட்டுகள் போல் எட்டு அங்கங்கள் இருப்பதால் அஷ்டாங்க யோகம் எனப்படுகிறது. அவை என்ன என்று நமக்கெல்லாம் நன்கு தெரியும் - யமம், நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணா, த்யானம், ஸமாதி என்பவை தான் அவை. அதே போல் தான் வேதாங்கம், பஞ்சாங்கம் என்ற சொற்களும். வேதத்திற்கு ஆறு அங்கங்கள் உள்ளது. திதி, வார, நக்ஷத்ர, யோக, கரண என்ற ஐந்து அங்கங்கள் தான் கொண்டதால் பஞ்சாங்கம் என்று பெயர். “ம்ருதங்கம்” என்ற சொல் எப்படி வந்திருக்கிறது தெரியுமா? ‘ம்ருத்‘ என்றால் களிமண் என்று பொருள். இறுகிய களிமண்ணால் செய்யப்படுவதால் அதற்கு ம்ருதங்கம் என்று பெயர் . அதனால்தான் ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபுவை பற்றி கூறும் பொழுது, ஒரு ஸமயம் அவர் பாவத்தில் இருக்கும் போது, களிமண்ணை பார்த்தாலும் கூட மூர்ச்சையாகி விடுவாராம் — ஏனென்றால் இதை கொண்டு தானே கோல் வாத்தியம் செய்கிறார்கள். அந்த வாத்தியத்தை கொண்டு தானே பகவந் நாம ஸங்கீர்த்தனம் செய்கிறோம் என்ற பாவங்கள் தோன்றி, மூர்ச்சை ஏற்படுமாம்.

அதே போல் "அனங்கன்" என்றால் காமதேவன் என்று அர்த்தம். அதாவது அங்கமே இல்லாதவன் என்று பொருள். ஏன் என்று எல்லோரும் அறிந்ததே. பரமசிவன்

தவம்புரியும்போது, அவருக்கு பார்வதி மீது காமத்தை உண்டு பண்ணுவதற்காக காமதேவன் தனது பாணங்களை போட, சிவ பெருமான் கோபம் கொண்டு, தனது நெற்றிகண்ணால் அவனை பொசுக்கிவிட்டார். அதனால் உடம்பு இல்லாமலேயே காமதேவன் வாழ்ந்து வந்தான். அதனால் "அனங்கன்" என்ற பெயர் பெற்றான். "அங்கஜ" என்றும் காமதேவனுக்கு பெயர். அங்கஜ என்றால் உடம்பில் உற்பத்தி ஆவது என்று அர்த்தம். காமம் என்பது நமது உடம்பில் உற்பத்தி ஆவதால் காமதேவனுக்கு அந்த பெயர். 'அங்கஜ ஜனக தேவ.....' என்று 'ரங்கபுரவிஹார' என்ற கீர்த்தனத்தில் முத்துஸ்வாமி தீக்ஷிதர் ரங்கனாதனை காமதேவனின் தந்தையே என்று அழைக்கிறார். க்ருஷ்ணாவதாரத்தில் காமதேவன் ப்ரத்யும்னன் என்ற பெயருடன் க்ருஷ்ணனின் பிள்ளையாக பிறந்தான் அல்லவா! அதனால் பகவானை மன்மதஜனகன் என்று கூறுகிறோம்.

அங்க! என்று ஸம்போதனமாகவும், அதாவது ஒருவரை அன்புடன் அழைத்து ஒரு விஷயத்தை கூறுகையிலும் ப்ரயோகபடும் இந்த சொல். "வ்ரஜவனௌகஸாம் வ்யக்திரங்கதே!" – என்று கோபிகாகீதத்தில் கோபிகைகள் கண்ணனை பார்த்து – 'ஹே ப்ரிய! நீ வ்ரஜவாஸிகளின் துக்கத்தை போக்குபவன்.....' என்று கூறுகிறார்கள்.

'புஜங்கம்' என்ற சொல் ப்ரஸித்தமானது. புஜங்கம் என்றால் பாம்பு. ஏன் அந்த பெயர் வந்தது என்றால், பாம்பிற்கு அங்கம் முழுவதுமே புஜம் (தோள்கள்), அல்லது அங்கங்களால் வளைந்து வளைந்து செல்வதாலும் புஜங்கம் (புஜ் என்றால் வளைவு என்று அர்த்தம்). ஸம்ஸ்க்ருத அலங்கார சாஸ்திரத்தில் 'புஜங்க ப்ரயாதம்' என்று ஒரு சந்தஸ் (meter) உள்ளது. அதில் அமைந்த ச்லோகத்தை படித்தால் ஒரு பாம்பு வளைந்து செல்வது போல் தோன்றும். புஜங்க ப்ரயாதம் என்றால் பாம்பு செல்வது என்று பொருள். இந்த சந்தஸில்தான் ஆதிசங்கரர் 'சுப்ரமண்ய புஜங்கம்' எழுதி உள்ளார். 'மஹாயோகபீடே தடே பீமரத்யா....' என்ற பாண்டுரங்காஷ்டகமும் அவர் இந்த சந்தஸில் தான் எழுதி உள்ளார்.

மேலும் 'ரதாங்கம்' என்றும் ஒரு சொல் உள்ளது. 'ரதாங்கபாணிரக்ஷோப்ய: ஸர்வப்ரஹரணாயுத:', என்று ஸஹஸ்ரநாமத்தின் கடைசி ச்லோகத்தில் கூட வருகிறது. ரதாங்கம் என்றால் சக்ரம் என்று அர்த்தம். ரதத்தின் ஒரு அங்கம் தானே அதன் சக்ரம் (wheel)! அதனால் ரதாங்கபாணி என்றால் சக்ரபாணியான பகவான் என்று பொருள். இவ்வாறு இந்த 'அங்க' என்ற சொல் பல பதங்களுக்கு மூலமாக இருக்கிறது என்றாலும் இத்துடன் முடித்துகொள்வோம்.

# உணர்வுபூர்வமாக ஸ்திரமாக இருக்க சில ரகசியங்கள்



**மிகவும் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள், எளிதில் விமர்சனங்களால் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஆகியோர் மனதின் அடிமைகளே! அவர்கள் புதிய அனுபவங்களை எதிர்கொள்ளாமல் தன்னம்பிக்கை குறைவுடன் இருப்பர். உணர்ச்சிகளால் பாதிக்கப்படாமல், மனவலிமையும் தன்னம்பிக்கையும் கொண்டவர்களின் சில எளிய குறிப்புகளை இந்தக் கட்டுரை விவரிக்கின்றது.**

## நம்முடைய கருத்துக்களை தீர்மானிக்க வேண்டும்

உலகில் நம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட தனிப்பட்ட விஷயம் அவரவரது தனிப்பட்டக் கண்ணோட்டம். எனினும், எதையும் பொருட்படுத்தாமல் தங்கள் கருத்துகளையும் நம்பிக்கைகளையும் நிலைநிறுத்தும் மனோதிடம் எல்லோரிடத்திலும் இருப்பதில்லை. அதற்காக, மற்றவர்களின் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் பொருட்படுத்தாமல் நம் அபிப்ராயத்தையே பிடித்துக்கொள்ள வேண்டும் என்று அர்த்தம் இல்லை. நம் கண்ணோட்டத்தை நிர்ணயித்த உடன், தேர்ந்தெடுத்த முடிவை மதித்து, எதிர் வரும் நியாயமான அல்லது ஆதாரமற்ற சமூக விமர்சனங்களை ஒதுக்கிவைக்கக் கற்றுக்கொள்ளும்போது, நமக்குள்ளே ஓர் ஆற்றலும், நம்பிக்கையும் ஊடுருவுவதை உணர்ந்து நாம் இனி தன்னிறைவுடன் செயல்பட இயலும் என்பதைத் தெளிவாக உணர முடியும். மேலும், மக்களின் மத்தியில் புகழ்பெற முடியும். ஏனெனில், சமூக விமர்சனங்களை சார்ந்து இல்லாமல், தனக்கென்ற நியமங்களும், நெறிமுறைகளும், தொலைநோக்குப் பார்வையும் உள்ள மனோபலம் கொண்டோரை மக்கள் மதிப்புடன் நடத்துவர்.

## நகைச்சுவை உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும்

சற்று வித்யாசமாக தோன்றினாலும், நகைச்சுவை உணர்வு நம் உணர்ச்சிகளை சீராக வைத்திருக்கவும் நம் நலனுக்கும் ஓர் முக்கிய அங்கமாக இருக்கும். நாம், பெரிய நிர்வாகத்தின் செயலாளரோ அல்லது சாதாரண வியாபாரியோ எப்படி இருந்தாலும், தக்க நேரத்தில், மன இறுக்கத்தைத் தகர்த்தெறிந்து 'relax' செய்ய கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில், நம் மனது உணர்ச்சிகளால் பாதிக்கப்படாத ஓர் திடமான நிலையை அடைய இயலாது. நகைச்சுவை என்பது மனோபலத்தை அதிகரிக்கவும் அன்றாட மன அழுத்தங்களிருந்தும், சச்சரவுகளிருந்தும் நம்மைக் காப்பதற்கு, செலவில்லாத சிறந்த வழியாகும். பிறரின் உணர்ச்சிப் பூர்வமான தாக்குதல்களை தக்க முறையில் தள்ளுவதற்கு வேடிக்கையான பேச்சுகளும் வெளிப்படையான அல்லது செயற்கையான சிரிப்பும் கூட பயன்படும். நகைச்சுவையை அதிகம் பயன் படுத்தும்போது, குறிப்பாக அலுவலில் இருக்கும் நேரத்தில், அது அன்றாட எதிர்ப்புகளை பெருமிதத்துடன் எதிர்கொள்ள சிறந்த பாதுகாப்பாக இருந்து உதவும்.

## வேடிக்கையாக இருக்கவும் தயாராக வேண்டும்

வேடிக்கையாக இருப்பவர்கள் தோல்வியுற்றவர்கள் என்றும் கோமாளிகள் என்றும் ஓர் பொதுப்படையான எண்ணம் உள்ளது. ஆனால், தங்களது குறுகிய வட்டத்திலிருந்து வெளியேறி, புதிய சூழ்நிலைகளுக்கு அனுசரித்து, பிறரின் பார்வைக்கு பயப்படாமல் தனக்குப் பிடித்ததை செய்பவர்களே உலகில் மகிழ்ச்சியானவர்களாக இருக்கிறார்கள். மாற்றங்கள், ஐயங்கள், வரக்கூடிய தோல்விகள், பதட்டமான சூழ்நிலைகள் ஆகியவற்றை எதிர்கொள்ளும் ஆற்றலே அவர்களது மகிழ்ச்சிக்கும், ஸ்திரமான உணர்வுகளுக்கும், வெற்றிக்கும் ரகசியமாகும். இந்தத் திறனானது, அவர்களை இந்த உலகை உற்சாகம் மிகுந்ததாக பார்க்கவும் தளராத நம்பிக்கையுடன் சிந்தனை செய்யவும் உதவும்.

## திட்டமிட்டு செயல்பட கற்றுக்கொள்ள வேண்டும்

எவர் வேண்டுமானாலும், ஒழுங்கான சூழலை கையாள முடியும். ஆனால், அறிவாளிகள் மட்டுமே ஒழுங்கின்மையை எதிர்கொள்ள முடியும் என்று, அடிக்கடி சொல்வதுண்டு. பெரும் மேதைகளாகவோ அல்லது முன்னேற்பாடின்றி செயற்படுவதில் வல்லவராகவோ இருந்தால் திட்டமிடுதல் பற்றி கவலைகொள்ள தேவையில்லை. ஆனால், அபூர்வமான வாய்ப்புகள் வாய்க்காத ஒரு சாதாரண மனிதனுக்கு அடுத்த நாளுக்கான திட்டமிடும் பழக்கம் உதவிக்கு வரும். நம்முடைய அபிப்ராயம் எவ்வாறாக இருந்தாலும், முன்னேற்பாடின்றி செயல்படுதல் என்பது நம்மை பதட்டத்தில் ஆழ்த்தி, நாள் முழுதும் தெளிவற்ற

நிலையில் வைத்துவிடும். நிச்சயமற்ற சூழ்நிலையை எதிர்கொள்ள விரும்பாதவர்கள், முன்னேற்பாடில்லாமல் செயலில் இறங்குவதை, செய்யும் செயல்களில் கைதேர்ந்தவர்களாக ஆகும் வரையில் தவிர்க்க வேண்டும். ஏனெனில், எதிர்பாராத சூழ்நிலையே பயத்திற்கும் பதற்றத்திற்கும் காரணமாக இருக்கிறது.

## அதிகப்படியான பொறுப்பேற்கும் பழக்கத்தை முறியடிக்கவும்

மனோபலம் குறைந்து உணர்ச்சி வசப்படுபவர்களின் முக்கியப் பிரச்சனை என்னவென்று பார்த்தால், தன் வாழ்க்கையில் நடக்கும் அனைத்துக்கும் தானே பொறுப்பேற்றுக்கொள்ளும் பழக்கமே என்று தெரியவருகிறது. இந்த அவநம்பிக்கை அளிக்கும் பழக்கத்தை உடனடியாக அகற்ற வேண்டும். ஏனெனில், அளவுக்கு மீறி பொறுப்பேற்கையில் வாழ்க்கையின் தரம் மிக குறுகிய காலத்தில் குறைந்துவிடும்.

## மாற்ற முடியாதவைகளுக்கு நம்மை நாமே தண்டிப்பதை நிறுத்த வேண்டும்

நம் பொறுப்புகளை கையாள்வதற்கும், கட்டுக்கடங்காதவற்றை கட்டுப்படுத்தும் ஆசையை குறைப்பதற்கு முயற்சி ஏதும் செய்யாமல் இருந்தால், நாம் மெதுவாக பதட்டத்தை வளர்பவர்களாக மாறி பல ஆட்டிப்படைக்கும் எண்ணங்களால் துன்புற தொடங்குகின்றோம். நம் மனதின் சக்தியை உணர வேண்டும் என்றால், குற்றம் காணும் தன்மையை கைவிட வேண்டும். கைமீறி போய்விட்ட ஒன்றை நாம் ஏதும் செய்ய இயலாது என்று உணரும்போது, பணிவுடன் நம் முன்னிருக்கும் சவால்களுக்கு கீழ்படிவது சிறந்தது.

## கடினமாக இருப்பினும் தொடர்ந்து செயல்பட வேண்டும்

நாம், வாழ்க்கையில் சில சமயங்களில் உலகமே நமக்கு எதிராக இருப்பதுபோல் தோன்றலாம். ஆனால், நாம் ஒருபொழுதும் முயற்சிகளை மேற்கொள்வதை நிறுத்திவிடக் கூடாது. நம் பயங்கள், தயக்கங்கள் ஆகியவற்றைக் கடந்து திடமான மனதுடன் இருக்க வேண்டும். ஆர்வத்துடன் செய்த செயலில் வெற்றி பெறாதிருப்பினும் நல்லதொரு பலனை அடைவதற்கு சிறந்த முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். மனதின் சக்தியை அதிகரிக்க, நாம் செய்ய வேண்டியது என்ன என்றால் தவறுகளை பற்றிய நம் கருத்துக்களை மாற்றிக் கொள்ள வேண்டும். தோல்விகளை பெருந்தன்மையுடன் கையாளும்பொழுது மனதில் வலிமையும், திடநிலையும் நாம் உருவாக்குகின்றோம்.

தைத்ரேய உபநிடதத்தில் உயிரினம், அவற்றின் பரிணாம வளர்ச்சி மற்றும் அவற்றிற்கான வான்வெளி வழித்தொடர்பைப் பற்றிய ஒரு பதிவு உள்ளது. மனு சம்ஹிதையும் பரிணாம வளர்ச்சியைப் பற்றி எடுத்துக்கூறியுள்ளது. ஜிவஜா (Viviparous) பாலூட்டிகள், அண்டஜா (Oviparous) முட்டையிலிருந்து குஞ்சு பொறிப்பவை மற்றும் உத்பிஜா (Vegetal) நுண்ணுயிர்கள் என்று சாந்தோக்கிய உபநிஷத் விலங்குகளை முதன் முறையாக மூன்றாக வகைப்படுத்தியது. பராசர மஹரிஷி அருளிய வ்ருக்ஷாயுவேதத்தில், தாவரங்களின் வடிவ அமைப்பு (morphology), உறுப்பியல் (anatomy) மற்றும் அவைகளின் வகைகளைப் பற்றிய விரிவான விளக்கம் காணக்கிடைக்கின்றது. உமஸ்வதியின் தத்வார்த்த ஸூத்திரத்தில், விலங்குகள், மேலும் பலவாறாக வகைபடுத்தப்பட்டுள்ளது. மகாபாரதத்தில், விலங்குகளின் மரபு வழி அட்டவணை மற்றும் கால்நடைக்கான கணக்கெடுப்பைப் பற்றிய குறிப்பு உள்ளது. மேலும், பண்டைய படைப்புகளில் மரபணு, அதைப் பற்றியதான அறிவியல், கால்நடை மகப்பேறுக்கு முன்பும் பின்பும் அவற்றை கவனித்துக் கொள்வதற்கான வழிமுறை ஆகியன பேசப்படுகின்றன.

## பாரம்பரிய பொக்கிஷங்கள்
# உயிரியல் உண்மைகள்-2

உடலில் ஏற்படும் வளர்சிதை மாற்றம் (metabolism), செரிமானம் (digestion), நோய் எதிர்ப்புத்தன்மை (immunity) ஆகியனவற்றை முதன் முதலில் எடுத்துக்கூறிய மருத்துவ நிபுணர் 'சரகா' ஆவார். அவருடைய கோட்பாட்டின்படி, உடலானது வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்று தோஷங்களை உடையது. இவற்றின் விகிதாசாரத்தில் மாற்றம் இருக்கும்போது அது உடலில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. அவருடைய மருத்துகள் அந்த விகிதாசாரத்தை சரி செய்கின்றன. மரபணு மற்றும் அதனுடைய அடிப்படை அவருக்குத் தெரிந்திருந்தது. அவர், இந்த அண்ட சக்தியின்/ஆன்மாவின் ஒரு மறுபதிப்புதான் இந்த ஒவ்வொரு உயிரினமும் என்ற எண்ணம் கொண்டிருந்தார். பஞ்ச பூதங்களோடு சேர்ந்த ஆறாவது பூதமான ஆன்மா, இந்த பிரபஞ்ச ஆன்மாவிற்கு/சக்திக்கு சமம் என்ற எண்ணம் கொண்டவராக இருந்தார்.


இப்படி, நம்முடைய முன்னோர்கள் உயிரியலில் ஆழ்ந்த அறிவியல் அறிவு பெற்றிருந்தமையினை அவர்களின் படைப்புகள்வாயிலாக நாம் அறிந்து போற்ற முடிகின்றது அல்லவா?

– பாலாஜி ராமசந்திரன்


# சைதன்ய மஹாப்ரபு -5
## அத்வைதாசார்யாரின் ஆசீர்வாதம்



விஸ்வரூபன் நற்பண்பும் பேரழகும் பொருந்தியவனாய் வளர்ந்தான். அவனுடைய தெய்வீகமான பார்வையினாலும், நல்ல குணத்தினாலும் எல்லோரும் அவனிடம் மரியாதையுடன் பழகினர்.




விஸ்வரூபனுக்கு உபநயனம் செய்யும் நேரம் நெருங்கியது. ஜகந்நாதமிஸ்ரரும், சசி மாதாவும் உபநயனம், முறைப்படி நடத்தினர்.




உபநயனம் முடிந்தவுடன், விஸ்வரூபன் அத்வைதாச்சார்யாரின் குருகுலத்தில் சேர்ந்து, வேதங்களும், புராணங்களும் பயின்றான்.





விஸ்வரூபன் தன் ஆசாரியர்க்கு பக்தி கலந்த மரியாதையுடன் தினமும் சேவை செய்தான். அத்வைதாச்சார்யார் அவனுடைய சேவையைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.




அவர் சொன்னபடியே விஸ்வரூபனுக்கு ஞானத்தை உரைத்தார்.




ஒரு நாள் பாடம் முடிந்தவுடன் விஸ்வரூபன் தன் குருவை தனது இல்லத்திற்கு வந்து உணவு அருந்த வேண்டிக் கொண்டான்.



அவரும் விஸ்வரூபன் வீட்டிற்குச் சென்றார். ஜகந்நாதரும் சசி மாதாவும் அவரை அன்புடன் வரவேற்று உணவும் அளித்தார்கள்.




தம்பதிகளின் சேவையில் பிரசன்னமான அத்வைதாசார்யார் அவர்களை வாழ்த்தினார்.

ஓவியர் : பாலமுரளி

# ஸனாதன புதிர் – 92

## ஆத்ரேயன்

### கேள்விகள்

1. சுக்ல யஜுர்வேதத்தின் வாஜஸனேய ஸம்ஹிதையின் நாற்பதாவது அத்யாயம் என்ன?
2. தலவகார உபநிஷத் என்று எதைக் கூறுகிறார்கள்?
3. கிருஷ்ண யஜுர்வேதத்தின் காடக ஆரண்ய பாகத்தில் அமைந்துள்ள உபநிஷத்தின் பெயர் என்ன?
4. மாண்டுக்யோபநிஷத் - இதை ஆதிசங்கரர் எப்படி வர்ணித்துள்ளார்?
5. க்ருஷ்ண யஜுர் வேதத்தின் தைத்திரிய ஆரண்யகத்தைச் சேர்ந்த 7,8,9 பகுதிகளில் அமைந்துள்ளது எது? அந்த பகுதிகளுக்கு மற்ற பெயர்கள் என்ன?
6. வாமதேவ மகரிஷி, கர்பத்தில் இருந்தபொழுதே ஆத்மஞானத்தை பெற்ற விவரங்கள் எந்த உபநிஷத்தில் காணப்படுகிறது. இதில் இருக்கும் மஹாவாக்யம் என்ன?
7. பத்து உபநிஷத்களில், இரண்டாவது பெரிய உபநிஷத் எது? இது எந்த வேதத்தின் எந்த சாகையைச் சேர்ந்தது? இதில் உள்ள மகாவாக்யம் எது?
8. பத்து உபநிஷத்களில் மிகப்பெரிய உபநிஷத் எது? இது எந்த வேதத்தைச் சேர்ந்தது? இதில் வரும் மஹாவாக்யம் என்ன?
9. சௌனகர் என்ற ஜிக்ஞாஸுவின் கேள்விகளுக்கு அங்கிரஸ் கொடுத்துள்ள பதில்கள் எப்படி அழைக்கப்படுகிறது?
10. ஆதிசங்கரர் பதபாஷ்யம், வாக்ய பாஷ்யம் செய்துள்ள உபநிஷத் என்ன?


Dr. Shriraam Mahadevan
MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes, Regn No. 62256
ENDOCRINE AND SPECIALITY CLINIC
New 27/1, Old 11/1, (Gr. Floor), 4th Cross Street, RK Nagar,
Mandaveli, Chennai -600028
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090, Mob: 9445880090
E-mail: mshriraam@gmaill.com, www.chennaiendocrine.comx

# ஸனாதன புதிர் – 92

## பதில்கள்

1. ஈசாவாஸ்யோபநிஷத் - 18 மந்திரங்கள்
2. கேனோபநிஷத்
3. காடகோபநிஷத். நசிகேதஸின் கேள்விகளுக்கு யமதர்மராஜன் பதில் அளிக்கிறார்
4. சர்வ வேதாந்தார்த ஸாரஸங்க்ரஹம். 'அயமாத்மா ப்ரஹ்ம'என்பது இந்த உபநிஷத்தைச் சேர்ந்தது.
5. தைத்ரீய உபநிஷத். சீக்ஷாவல்லி, ப்ரம்மானந்தவல்லி, ப்ருகுவல்லி
6. ஐதரேய உபநிஷத் - 'ப்ரக்ஞானம் ப்ரஹ்ம'
7. சாம வேதம் - கௌதும சாகை - சாந்தோக்ய உபநிஷத் - 'தத்வமஸி'
8. ப்ரஹதாரண்யக உபநிஷத், சுக்லயஜுர் வேதம் - சதபத பிராம்மணம். 'அஹம் ப்ரம்மாஸ்மி'
9. முண்டகோபநிஷத் - அதர்வ வேதத்தின் ஸம்ஹிதை
10. கேனோபநிஷத்

# புராநவா




**இந்த கோவில் எங்கு உள்ளது?**

**<u>சென்ற மாத புராநவா பதில்</u> - ருத்திராக்ஷம்**

# படித்ததில் பிடித்தது

**செய்தித்தாள்களிலும் பத்திரிக்கைகளிலும் வந்த சுவாரஸ்யமான செய்திகளின் தொகுப்பு**

## When Kerala's Tholpavakoothu met Japan's Kamishibai to tell fantastic stories

The Indian Express
28 November 2016



**தோல்பாவைக்கூத்து மற்றும் கமிஷிபாய் இவை இரண்டுமே நிழற்படங்களைக் கொண்டு கதை சொல்லும் முறைகளாயினும், இக்காலத்து அனிமேஷன் படங்களுக்கு (animation movies) கொஞ்சமும் சளைத்தவை அல்ல. சமீபத்தில் புது டெல்லியில் நடந்த உலகளாவிய கதை சொல்லும் விழாவான கதார்கரில் இவ்விரண்டு கலைகளும் மிகச்சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தன. தோல்பாவைக்கூத்து என்பது 12-ஆம் நூற்றாண்டில் வெளியான கம்பராமாயணத்தைப் பற்றியது. கமிஷிபாயோ 12-ஆம் நூறாண்டில் ஜப்பானில் நடைபெற்று வந்த தெருக்கலைகளின் அடிப்படையில், படங்களின் மூலமாகக் கதை சொல்வதற்காக புத்த மதத்தினரால் பின்பற்றப்பட்ட முறையாகும். ராமனின் கருணை, ஹனுமானின் விசுவாசம், சீதையின் வேதனை, ராவணனின் முரட்டுத்தனம் அனைத்தையும் வெறும் பொம்மைகளின் அசைவுகளைக்கொண்டு நிழற்படத்தில் தத்ரூபமாக விவரிக்கின்றது. கேரளாவைச் சேர்ந்த விஸ்வநாத புலவர் மற்றும் அவரது குழு இந்தியாவிலும் சீனாவிலும் தோன்றிய நிழற்படக்கலையானது தாய்லாந்திலும் ஜெர்மனியிலும் புத்த மதத்தைப் பரப்புவதற்காக பரவியதென்று அதன் தோற்ற வரலாறு கூறுகிறது. 12ஆம் நூற்றாண்டின் ஜப்பானின் தெருக்கூத்து வடிவமான கமிஷிபாய் கலை, ஈ-டோகி எனும் பௌத்த கதைகளை ஓவியங்கள் வாயிலாகச் சொல்லும் கலையின் விரிவாக்கமே ஆகும்.**

## How Madhubani Art Is Bringing down Pollution Levels in Bihar

www.dailyhunt.in
10 December 2016

சிப்கோ இயக்கத்தின் மூலம் உத்தராஞ்சல் மகளிர் 1970களில் மரங்களைக் காப்பதில் முன்னிலை வகித்தது போலவே, பீஹாரின் மதுபனி மாவட்டத்தைச் சேர்ந்த தற்கால மகளிரும், பூமியின் இந்தப் பச்சை உறைபோன்ற மரங்களை கைவேலைப்பாடுகள் மூலம் காத்து வருகின்றனர். வடக்கு பீஹாரின் பசுமை நிலப்பகுதி பாரம்பரிய மதுபனி சித்திரங்களுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது. கடந்த சில வருடங்களாக காடுகளின் வெளி உறையாக விளங்கும் மரங்கள் அழிக்கப்பட்டு வந்ததனால் வனப்பகுதி குறைய ஆரம்பித்திருந்தது. கிராம விகாஸ் பரிஷத் என்னும் சுய உதவிக்குழுவின் செயலர் திருமதி ஷஷ்தி நாத் ஜா என்பவர் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட்டார். இன்று, ராம்பட்டிக்கும் ராஜ்நகருக்கும் இடைப்பட்ட பகுதிகளில் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு காடுகள் கோடாலிகளிடமிருந்து காப்பாற்றப்பட்டதோடு மட்டுமின்றி பெண்களின் கலைத் திறமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. தைனிக் பாஸ்கர் பத்திரிக்கையின் அறிக்கையின்படி, இந்த சித்திரங்கள் நமது கலாசாரத்தை ஒட்டிய தெய்வ வடிவங்களை தாங்கியுள்ளன. எனவே, இந்த மரங்களை கிராம மக்கள் மிகவும் புனிதம் வாய்ந்ததாகக் கருதி அவற்றை வெட்டுவதிலிருந்து காத்துவிடுகின்றனர். ராமன், சீதை, கிருஷ்ணன், புத்தர், மகாவீரர் முதலான தெய்வங்களின் வடிவங்கள் வரையப்படுகின்றன. இதன் மூலம் ஒவ்வொரு மரமும் ஒரு சுவாசிக்கும் கோவிலாக மாறி வருகின்றது.



மதுரமுரளி

- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 7-15 ஜனவரி 2017 | உபந்யாசம், நாரத கான சபா, சென்னை |
| 08 ஜனவரி 2017 | வைகுண்ட ஏகாதசி |
| 23 ஜனவரி — 4 பிப்ரவரி 2017 | சேங்கனூர் ஸ்ரீ ஸ்ரீநிவாச பெருமாள் திருக்கோவில் ப்ரஹ்மோத்சவம் |

## அறிவிப்பு


அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Email:helpdesk@madhuramurali.org

Ph: "24895875" SMS '9790707830'

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No11, Door No 4/11, Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org



சென்னை வாணி மஹாலில், 27 Nov 2016 அன்று ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடந்த ஸ்ரீ டீ.வீ. வரதராஜன் அவர்களின் ஸ்ரீ தியாகராஜர் நாடகத்தில்

Registered with The Registrar of Newspapers for India
R.No.62828/95
Regd. No. TN/CC(S)DN/119/15-17

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP—608/15-17



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar